# கும்பேஸ்வரர் கோயிலின் இசை மரபு



**Dr.R.Chandra**

**Asst.Professor Invocal**

**Faculty of Fine Arts**

**Department of Music**

**Annamalai University**

## முன்னுரை

நமது இந்திய நாடு பாரம்பரியம் மிக்க நாடு. இந்து மதம் பல பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. ஓவ்வொரு பிரிவினரும் ஓவ்வொரு கடவுளை வழிபட்டு வந்துள்ளனர். சௌரம் என்ற பிரிவினர் சூரியனையும் கௌமாரம் என்ற பிரிவினர் முருகனையும் காணாபத்யம் என்ற பிரிவினர் கணபதியும் வழிபட்டு வந்தனர். இன்றைய நிலையில் தென்னிந்தியாவில் சைவமும், வைணவமும் மிக முக்கிய பிரிவுகளாக வளர்ச்சியடைத்துள்ளன.

ஓவ்வொரு பிரிவும் ஒவ்வொரு கோட்பாடுகளைக் கொண்டிருந்தாலும் அவை அனைத்தும் ஆன்மீக முறைகளை கடைபிடித்து வந்துள்ளதாகத் தெரிகிறது. கலைகள் இலக்கியங்கள் என்ற பல ஊடகங்கள் மூலமாக அவை பிரபலமாக்கப்பட்டுள்ளது. அவற்றின் சான்றுகளாகவும் மூலங்களாகவும் விளங்குபவை நமது தென்னக கோயில்கள், சிற்பங்கள் இசை நூல்கள், இசைப்பாடல்கள் போன்றவைகள் ஆகும்.

தமிழகக் கோயில்களில் மிகவும் முக்கியமானக் கோயில்களில் ஒன்றான குடந்தையில் (கும்பகோணம்) உள்ள கும்பேஸ்வரன் கோயிலின் இசைச் சிறப்புகள் பற்றிய செய்திகளை இதில் காண்போம். இவ் ஆய்வுக்கட்டுரை விபரண ஆய்வு, வரலாற்று ஆய்வு முறையியல்கள் ஊடாக ஆராயப்பட்டுள்ளது. கும்பேஸ்வரர் கோயிலின் இசை மரபினை உலகறியச் செய்வதனை ஆய்வு நோக்காக கொண்டு எழுதப்பட்டுள்ளது

**திருக்குட மூக்கு**

சைவத் தலங்களில் மிகவும் பிரசித்தி பெற்ற தலமாகும்

**தலக்குறிப்பு**

கும்பேஸ்வரன், மங்களாம்பிகை கி.பி.962-980 ஆம் ஆண்டில் கும்பகோணத்தை தலை நகரமாகக் கொண்ட சோழ மன்னன் ஒருவரால் கட்டப்பட்டது. குடந்தை நகரின் மேற்குப் பகுதியில் கடைத் தெருவில் அமையப் பெற்றுள்ள கும்பேஸ்வரன் கோயில் திருக்குடமூக்கு என்பர்

**“குடமூக்கே குடமூக்கே என்பீராகில் கொடுவினைகள்**

**தீர்ந்தனைக் குறுகலாமே” என்று அப்பர்**

இத்தலம் பெருமையைப் பாடியுள்ளார்.

இத்தலத்தினை மையமாகக் கொண்டு ஆண்டு தோறும் சப்தஸ்தானத் திருவிழா நடத்த பெற்று வருகிறது. மற்ற ஆறு தலங்களான கலய நல்லூர், தாராசுரம், திருவலஞ்சுழி, சுவாமிமலை கொட்டையூர், மேலகாவேரி ஆகியவை ஆகும்.

கும்பமுனி சித்தி பெற்ற கொண்டு ஆறு முகங்கள், ஆறு கைகள் கொண்டு கார்த்திகேயன் வடிவமும், மங்களாம்பிகை வடிவமும் கண்குளிர தரிசித்தத் தக்கவையாகும் திருஞான சம்பந்தரும், அப்பரும் இத்தலத்தில் பாடியுள்ளனர்.

இத்தல வரலாற்றின்படி அமுத கும்பம் வைத்திருந்த இடம் கும்பேசம் எனவும், அமுத கும்பத்தில் வைத்த வில்வம் நாகேசவம் எனவும் அமுத கும்ப தேங்காய் அபிமுகேசம் எனவும் அமுத குடத்தை வில்லால் சிதைத்த இடம் பாண புரேசம் எனவும் கும்பம் சிதறிய பொழுது அதன் பூணூல் சிதறிய இடம் கௌதமேசம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தேவாரப் பாடல்கள்**

திருநாவுக்கரசர் தேவாரம்

இராகம் - நாதநாமகரியா

தாளம் - ஆதி

திருக்குநற் தொகை

5 ஆம் திருமுறை

பூவணத்தவன் புண்ணிய நண்ணியங்கு
ஆவணத்துடையான் அடியார்களை
தீவணத்திருநீறு மெய்ப்பூசியோர்
கோவனத்துடையான் குடமூக்கிலே

என்று குடமூக்கு இறைவனைப் புகழ்ந்து திருநாவுக்கரசர் பாடியுள்ளார்

**திருப்புகழ்**

காலையில் எழுந்து முருகன் பெயரைக் கூறி உமை மைந்தன் என்று திருப்புகழ் ஓதி காலத்தை உணர்ந்து முருகன் அருள் பெறுவது எந்நாளோ? என்று இத்தலத் திருப்புகழில் அருணகிரிநாதர் பாடியுள்ளார்.

இந்து கதிர் சேரருணப் பந்தி நடுந் துனொறிபட்

டின் பரசப் பாலமுதச் சுவை மேவு

எண் குணமுற் றேனடனச் சந்த்ரவொளிபீடகமுற்

றெந்தைநடித் தாடு மணிச் - சடையூடே

சந்திரனின் ஒளியைப் போன்ற பீடத்தில் நடன மாடுபவரே என்றும் திந்த திமி தீத – என்ற சொற்கட்டுடன் கூடிய தவிலோசைக்கு ஆடும். கதிர் வேலா என்றும் பாடியுள்ளார். மேலும்

குந்தியரித் தாழ்துளபச் செந்திருவைச் சேர் களபத் தரை மீதே

கும்பிடகைத் தாளமெடுத் தம்பொனுருப் பாவைபுகழ்

கும்பகோணத் தாறுமுகப் பெருமாளே

என்று பாடியுள்ளார்.

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்து ஸ்வாமி தீட்ஷிதர் இத்தலத்தில் எழுந்தருளி க்ருதிகளை இயற்றியுள்ளார்.

முத்து ஸ்வாமி திச~pதர் க்ருதி

இராகம் : கல்யாணி

தானம் : ஆதி

**பல்லவி**

கா மா பா, தபம கா ; ரீ | ஸா, ரி ஸ நி தா | நீ ரீ கா மா ||

கும்பேஸ் வ ரே ண | ஸம்…ர… | சஷிதோ ஹம் ||

கா மா பதிநித பதபம் காரீ | }ரிநரிஸநிஸரி | கமபத நிதபம் ||

கும் பேஸ் வ ரே ண | ஸம்….ர…. | சஷி  தோஷம் ||

**அனுபல்லவி**

காமா பா பா : தாபமநித | பாதநிபாதா | ஸ்நிரீ;இ ஸ் ||

கும்ப ஜா. தி முனி | மூ. ஜித | வ.ரேண ||

காமாபா நிஸ்நிதபத பமநித | பதநிஸ்நிதபத | ஸ்நிக்ரிஸ்நிதப ||

கும்ப. ஜா தி முனி…. | பூ. ஜி. த | வ.ரே ண

கமபாதப பம நிஸ்  நிரிநிதபமநித | பதநீஸ்நிக்ரி |

கும்  பஜா  தி  …  மு னி  |  பூ … ஜத

ஸ்ரிநித  பமகரி ||

வ…ரே….ன ||

**கரணம்**

கா: மாபா தநிதா ஸ்hஸ்நி | தா தநி பர் | பமகா, கரீ ||

கும். ப மா….ஸ….ம….கா | ம. ஹோ த் | ஸ. வே. ன ||

கா: மாபத நீ!;நி தாநிரீ ஸ் நி | தா தநி பா: மதாமகாh ||

கம் ப மா ஸ ம கா ம | ஹோஸ | வே … ன ||

கா பா மாபா தாபம பாதா | க்hரீ ஸ் நிதா | தபாதா நிரிநீ ||

கா. ம கோடி….பீ…… | ட. யதி … || நு தே .. ன ||

**மத்யமகாலம்**

தநி ஸ் நித க்ரிரிஸ்h நிநிதபதநி|

இப வதன குருகுஹா நந்தேன

ரிக்ரி ஸ்ரிப்ம்க் | க்ரிஸ்h நிதபம்

இந்து தர மங்க | ளாம்பா யிதேன

புரந்தர தாஸர் இயற்றிய கீர்த்தனை

**இராகம்** : மோகனம்

**தாளம்** : ஆதி

**பல்லவி**

சந்தர சூட ஸிவ ஸங்கர பார்வதி ரமன

நினகெ நமோ நமோ

சுந்தர ம்ருகுதர பினாகதனுகர

கங்காதர கஸசர்மாம் பரதர

**சரணம்**

தரெகெ த~pண காவேரி தீர கும்ப புரவாஸனு நீனே

கரதலி வீணெய காணவ மாடுவ உரக பு}ணவனுநீனே

கொரளலி பஸ்ம ருத்ரா~p தரிஸித பரம வை~;ணவனுநீனே

கருட கமன ஸ்ரீ புரந்தரவிட்டலாக மருளாவதனு நீ னே

கனம் கிருஷ்ணய்யர் இயற்றிய கீர்த்தனை

**இராகம்** : ஆனந்த பைரவி

**தாளம்** : ரூபகம்

### பல்லவி

ஈஸ்வரி ஜகதம்பா நின் இணையடி துணையென நம்பினேன்

எப்படியோ உனதருளன் கற்பகமே தாயே

### அனுபல்லவி

வாசவன் போற்றுங் குடந்தை நகர் வாழும் மணோன் மணியானே

தேச மார்க்கும் பேசரிடம் வாழு; செல் விஜய மங்கள்நாயகி

### சரணம்

உன் தனை நான் அனுதினமு மென் சிந்தையில் நினைந்து நினைந்து

வந்தனை புரிந்தும் இன்னமும் இந்தத் தா மதம்

கொந்தலர் குழலியே நினைத்தவர் அந்தரச் சமயங் கடைக்கண்பார்

மந்திர நிகர் முலையாளே நிரந்தர முலகெங்கும் நிறைந்திடும்

**இசை மரபு:-**

**நாதஸ்வரம்**

மற்ற சைவ கோவில்களில் வாசிக்கப்படும் இசைமரபைவ பின்பற்றியே இத்தலத்திலும் இசைக்கப்படுகிறது.

விழாக் காலங்களில் கோவிலுக்கென்று நியமிக்கப்பட்ட நாதஸ்வர வித்வான்கள் முதலில் நிகழ்ச்சியைத் துவங்கி வைப்பார்கள் தொடர்ந்து வித்வான்கள் சுவாமி புறப்பாட்டில் ஆரம்பித்து வீதி உலா முடிந்த பிறகு கருவரைக்குள் சுவாமி செல்லும் வரை வாசித்து வருவர்

விழாக்காலங்களில் நவசந்தி என்று அழைக்கப்படும் ஒன்பது திக்குகளுக்கும் 9 இராகங்கள் நாதஸ்வர கலைஞர்களால் வாசிக்கப்பட்டுவருகிறது.

**ஓதுவார்களின் பங்கு**

ஓதுவார்கள் தினமும் ஆறுகால பூஜையில் பாடுவார்கள். பஞ்ச புராணம் பாடப்பட்டு வருகிறது. (தேவாரம், திருவாசகம் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம்) மேலும் பன்னிரு திருமுறைகளை பாராயணம் செய்யப்பட்டு வருகிறது. திருப்புகழ், அபிராமி அந்தாதி போன்றவைகளும் பாடப்பட்டு வருகிறது.

**நாட்டியத்தின் பங்கு**

தினமும் நடைபெறும் பூஜை காலங்களில் ஷோடச உபவச்சாரத்துடன் நடன மங்கையங்களின் நடனம் நடைபெற்றது. 1920 ஆம் ஆண்டின் முற்பகுதி வரை இந்த முறைகளை கையாண்டு வந்தனர்.

விழாக்காலங்களில் தேரில் சுவாமி புறப்பாட்டின் போது நாதஸ்வரக் கலைஞர்கள் தேர் மல்லாரி. வாசிக்கும் போது நடன மங்கையர்கள் ஆடினர். கோபுர வாயிலிலோ. அல்லது ஆடுவதற்கு என்று ஒதுக்கப்பட்ட இடத்திலோ நட்டுவனார் பாட மிருதங்கம் புல்லாங்குழல் நின்று கொண்டு வாசிக்க நடன மங்கையர்கள் ஆடினார்கள் சுவாமி கோவிலுள் வரும் பொழுது நடன மங்கையர்கள் சுவாமிக்கு த்ருஷ்டி கழிப்பார்கள். இரவு லாலி, ஊஞ்சல் பாடல்கள் நடன மங்கையர்களால் பாடப்பட்டு நாதஸ்வர வித்வான் மல்லாரி வாசிக்க அன்றைய நிகழ்ச்சி நிறைவுபெறும் விழாக் காலங்களில் பஞ்சமூர்த்தி கவுத்துவம், நவசந்தி கவுத்துவம் ஆடப்பட்டது.

இக்கோயிலில் கல் நாதஸ்வரம் காணப்படுகிறது. சிவராத்திரி, மாசி மகப்பெருவிழா போன்ற காலங்களில் இசை மற்றும் நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.

18 ஆம் நூற்றாண்டில் பாபவிநாச முதலியார் ‘கும்பேசர் குறவஞ்சி’ என்ற நாட்டிய நாடகத்தை இத்தலத்தின் சுவாமியையும், அம்பாளையும் நாயகன், நாயகியாக வர்ணித்து இயற்றியுள்ளார். என்பது குறிப்பிடத்தக்கது. இந்நூல் 1941 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. 1944 ஆம் ஆண்டு புதிக்கப்பட்டது. நடன கலைஞர் திரு. தீபக் வெங்கடேஷ் அவர்கள் இக் குறவஞ்சி நாட்டிய நாடகத்தை தற்பொழுதும் நிகழ்த்தி வருகிறார்.

**முடிவுரை**

தென்னகத்தில் இசைக்கும் இறை தொண்டிற்கும் மிகவும் முக்கியமான பங்கு உண்டு. அதிலும் காவிரி கரையை ஒட்டி வாழ்ந்தால் இவ்விரண்டும் இயற்கையாகவே ஒவ்வொருவரிடமும் அமைந்திருக்கும். குடந்தையில் நடுநாயகராகவும், நாயகி யாகவும் திகழும் கும்பேஸ்வரார், மங்களாம்பிகை கோவிலின் இசைமரபு பற்றி இத்தருணத்தில் அனைவரிடமும் பகிரிந்து கொண்டேன் சங்கீத சுதா என்ற க:ரந்த நூலை இயற்றிய -ஸ்ரீ கோவிந்த தீட்ஷிpதர் மற்றும் அவரது மனைவியின் சிலை பிரதிஷி;டை செய்யப்பட்டு அன்றாட பூஜை நடைபெற்று வருகிறது.

கும்பேஸ்வரர் கோயிலின் இசைமரபினை இளஞ்தலை முறையினருக்கு எடுத்து இயம்புவிரையில் இவ் ஆய்வுக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இவ் இசைமரபினை தலச்சிறப்பு, திருப்புகழ், ஒதுவார்களின் பங்களிப்பு, நாட்டியத்திற்குரிய எடுத்து இயம்பப்பட்டுள்ளது.

**துணை நூற்பட்டியல்:-**


1. கும்பகோணம் ஓர் அறிமுகம் - முணைவர் S.சபரிநாதன்
2. Tanjore as a seat of music – Dr.S.Seetha
3. பன்னிரு திருமுறை - G.S.முரளிதரன் சதுரா பதிப்பகம்
4. திருப்புகழ் - சுவாமி குஷாநந்தா திருப்புகழ் சபை, சேலம்